*THE VAIYAI AND HISTORICAL RECORDS*

# வையையும் வரலாற்று ஆவணங்களும்

பேரா. மு. பாண்டி
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.
*Email: profpandi@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

உலகில் ஒவ்வொரு சமூகமும் தனது தொன்மை, குடி, மரபு, மனித நாகரிகத்திற்குச் செய்திருக்கும் பங்களிப்பை அடையாளப்படுத்துவது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கிரேக்க, எகிப்திய,ரோமானிய, சிந்துவெளி நாகரிகத்திற்கு இணையான தொன்மை, பண்பாடு, நாகரிகச் சிறப்புக்களைத் தமிழினம் பெற்றிருக்கும். மரபைத் தேடிக் கண்டறியும் தொடர் ஆய்வுகளும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்று கீழடி அகழ்வாய்வு. கீழடி சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்திற்கு மேற்கே எட்டுக் கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது தமிழர்களின் தாய்மடி என்ற பெருமைமிகு கீழடி. இங்கு இந்திய, தமிழகத் தொல்லியல் துறைகளும் இதுகாறும் நிகழ்ந்த நான்கு அகழாய்வுகளில் 5800 தொன்மையான வரலாற்று ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழகத்திலுள்ள பதினேழு தொன்மையான ஆற்றங்கரை நாகரிகங்களுள் வையைக்கரை நாகரிகம் தமிழ் வளர்த்த தனிச் சிறப்புப் பெற்றது.

**திறவுச் சொற்கள்**

**வையை, ஆறு, நீர், வரலாறு, ஆவணம்**

*Abstract*

*Across the globe, every society continuously seeks to highlight its antiquity, lineage, heritage, and contributions to human civilization. The Tamil people possess a legacy of antiquity, culture, and civilizational excellence comparable to that of the Greek, Egyptian, Roman, and Indus Valley civilizations. Ongoing research efforts are dedicated to uncovering and documenting this heritage; the Keeladi excavation is one such significant endeavor. Keeladi is located eight kilometers west of Thirupuvanam in the Sivaganga district—a site celebrated as a cradle of Tamil identity. To date, four rounds of excavations conducted by the Archaeological Survey of India and the Tamil Nadu State Department of Archaeology have unearthed 5,800 ancient historical artifacts. Among the seventeen ancient river-valley civilizations in Tamil Nadu, the Vaigai river civilization holds a unique distinction for its role in nurturing the Tamil language and culture.*

*Keyword*

*Vaigai, river, water, history, document*

ஆற்றங்கரை நாகரிகம்:

மாந்தர் தோன்றி வளர்ச்சியடைந்தது பல லட்சம் ஆண்டுகளின் வரலாற்றையுடையது. பெருவெடிப்பிலிருந்து சிதறிய துகள்களிலிருந்து உருவான நிலத்தில் புல், புழு, விலங்கு, குரங்கு, காட்டுமிருகாண்டி, அலைகுடிகள், இனக்குழு ஆற்றங்கரையில் நிலைபெற்ற வேளாண்குடி, மொழிப்பேசி, இலக்கியம் உருவாக்கிக், கல்வியறிவுப் பெற்று தொழில்களால் வளர்ந்த சமுதாயம், இன்றைய செயற்கை நுண்ணறிவுச் சமூகம் என்ற நிலைக்கு உயர்ந்திருக்கின்றனர்.

**வையை:**

தேனி மாவட்டம் வருசநாடு மற்றும் மேகமலைப் பகுதிகளில் பெய்யும் மழை மற்றும் மலை ஊற்று நீரால் உருவாகுவது வையை, பெரியாற்றின் கூடுதல் நீருடன் கலந்து வையையாகி ஆண்டிபட்டி அணையில் தேக்கம்பெற்று, மீண்டும்; வையையில் திறக்கப்படுகிறது. தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 258 கிலோமீட்டர் பாய்ந்தோடி இராச சிம்ம மங்கலம் கண்மாயில் கலக்கின்றது. கடலில் கலக்காத ஆறு என்னும் தனிச்சிறப்புடையது. வையை வளர்த்த தமிழ்ச் சங்கங்கள் கடல்கோள்களால் அழிந்தமையால் வருத்தமுற்ற வையை கோபித்துக்கொண்டு கடலோடு சேரவில்லை என்பது செவிவழிச்செய்தி. "பாண்டிய நாட்டை வளமடையச் செய்ததால் 'தென்னவன் வையை' என்பர்"[1] தமிழை வையை ஏட்டில் தவழ்ந்த பேதை எனவும் சிறப்பிப்பர். தமிழ் வையை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழக ஆறுகளுள் வையை தமிழுடன் மிகுதியான தொடர்பைப் பெற்றுள்ளது நோக்கத்தக்கது. மணிமேகலைக் காப்பியம் தென்தமிழ் மதுரை எனச் சுட்டுகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் வையை ஓடி வரும் மேற்கு எல்லையான மணலூரிலிருந்து கிழக்கு எல்லையான வேதியாரேந்தல் தடுப்பணை வரை ஏறத்தாழ 60 கிலோ மீட்டர் பாய்கின்றது. இவ் அறுபது கிலோ மீட்டர் தொலைவில் வையையின் நீர் இரு கரைகளின் ஓரங்களிலும் கால்வாய், வாய்க்கால். சுரணை, தூம்பு வழியாகக் கண்மாய்கள், குளங்கள், ஊருணிகள் போன்றவற்றில் தேக்கப்படுகின்றது. நீர்த் தேக்கங்கள் ஒவ்வொன்றின் கரைகளிலும் பல் இனங்கள் வழிபடும் தெய்வங்கள் உறைகின்றன. பன்னெடுங்காலமாக இரு பக்கங்களிலும் வையை நீரில் வேளாண்மை, பிற தொழில்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மணலூர், கீழடி, கொந்தகை, தட்டான்குளம், திருப்புவனம், கலியாந்தூர், பிரமனூர், வன்னிகோட்டை,

பறையன்குளம், சொறிக்குளம், பாப்பான்குளம், மாறைநாடு, வாகுடி, பெரும்பச்சேரி, கட்டிக்குளம், கொம்புக்காரனேந்தல், மிளகனூர், அக்கவயல், அளவிடங்கன், கீழநெட்டூர், கண்ணனூர், மாங்குளம்,எம். கரிசல்குளம், அன்னவாசல் போன்ற ஊர்களில் வேளாண்மை செழிப்பாக நடைபெறுகிறது.

இவ் ஆற்றுப்படுகையில்; அமைந்துள்ள திருப்புவனத்தில் மேற்கிலிருந்து கிழக்காகச் செல்லும் வையையின் இருகரைகளையும் ஒட்டியுள்ள ஊர்களில் வையைத் தன் வரலாற்று ஆவணங்களைப் பொதிந்து வைத்திருக்கின்றது. மதுரை, கீழடி,மணலூர், திருப்புவனம், கலியாந்தூர்,மாறைநாடு, கலையூர், அழகன்குளம் எனப் பல இடங்கள் தொல்;லியல் ஆய்வுக்கு உகந்தவை.இவ்விடங்களில் கீழடி, அழகன்குளம் ஆகிய இரு இடங்களில் மட்டும் அகழாய்வு நிகழ்ந்துள்ளன. “கீழடி அகழ்வாய்வில் 5800 கிடைத்த தொன்மையான பொருட்களில் குழாய்கள், வட்டக்கிணறுகள், கழிவுநீர்த்தொட்டி, சுடுமண் உறை, உறைக்கிணறுகள், பெரிய கட்டுமானச் சுவடுகள், சரளை, மண் குழாய் போன்றவை நீர் மேலாண்மை பொருள்கள் போல இப்பகுதியில் இன்னும் மிகுதியாகக் கிடைக்கு”[2] வேளாண்மைக்கு நீர்ப் பாசனம் தரும் கண்மாய், குளம், கால்வாய், வாய்க்கால் போன்றவற்றையும் பருத்தி ஆடை, நெசவு, தச்சு, கொல்லு, மண்பாண்டங்கள் போன்றவை மக்கள் திட்டமிட்டு நகர நாகரிகத்தில் வாழ்ந்த கட்டடங்களின் எச்சமாகத் திகழுகின்றன.

எஞ்சிய மணலூர், கலியாந்தூர், திருப்புவனம், மாறைநாடு, தஞ்சாக்கூர், மானாமதுரை போன்ற வையை கரைஊர்களில் ஆழ,அகல, விரிவான ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதன் மூலம் தமிழர்களின், தமிழின் காலப் பழமை, மரபு, நாகரிகத்தைப் புலப்படுத்தும் சான்றுகள் இன்னும் கூடுதலாகக் கிடைக்கும்.

வையையும் தொன்மையும்

நக்கீரரின் திருமுருகாற்றுப்படையில் மதுரையைப் பற்றி கூறப்பட்டுள்ளன. "பாண்டியனால் அமைக்கப்பட்ட கூடல் கிழக்கில் திருப்பூவனத்தையும், மேற்கில் திருப்பரங்குன்றத்தையும் நோக்கியபடி இருந்தது என்று திருவிளையாடற்புராணம் தெரிவிக்கின்றது. திருப்பூவணத்தையும், திருப்பரங்குன்றத்தையும் முறையே கிழக்கிலும், மேற்கிலும் பார்த்தபடியே கூடல் அமைந்திருந்தது என்பது இதனால் விளக்கமாகும்" என்கிறார் வரலாற்றறிஞர் மா. இராசமாணிக்கனார். *(பத்துப்பாட்டு ஆராய்ச்சி ப. 182)*

மதுரைக்காஞ்சியில்

"கோதையின் ஒழுகும் விரிநீர் நல்வரல்

அவிர்அறல் வையைத் துறைதுறை தோறும். *(மதுரைக:; 336 -340)*

வையை அன்ன வழக்குடை வாயில்" *(மதுரைக்: 356)*

என வையைச் சிறப்பிக்கப் பெற்றுள்ளது.

பரிபாடல்

சங்க இலக்கியங்களுள் தமிழின் முதல் இசைப்பாடல் என்ற சிறப்புடைய பரிபாடலில் வையை 26 பாடல்களில் சிறப்பிக்கப்பட்டுள்ளது. நல்லழிசியார் , நல்வழுதியார் மையோடக் கோவனார், ஆசிரியர் நல்லந்துவனார், கடும்பிள்ளைப் பூதனார் என 13 பேர் சிறப்பித்துப் பாடிய எட்டுப் பாடல்கள் (49,55,86,101,102,106,131,140) உள்ளன. மையயோடக் கோவனார்

"நலன்நந்த, நாடு அணிநந்த, புலன்நந்த

வந்தன்று, வையைப் புனல்" *(9-10)*

என மழைவளம் நீர்வரத்து, வெள்ளப்பெருக்கு அதனால் கிட்டிய நிலவளம், இயற்கைவளம், தொழில்வளம்,வழிபாடு, விழாக்கள், மக்கள் புனலாடும் மகிழ்ச்சி போன்றவை வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**நல்லந்துவனார்**

வகைசாலும், வையை வரவு. (பரி 10-13)

தானையாயின் வையை வனப்பு (பரி 50)

என்கிறார். இவ்வாறு சங்க இலக்கியற்களில் திருமுருகாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, பரிபாடல் போன்றவற்றில் வையை வளங்கள் பதிவாகியுள்ளன.

சிலப்பதிகாரப் புறஞ்சேரி இருந்த காதையில்

" புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி

வையை என்ற பொய்யா குலக்கொடி"

(சிலம்பு 13;: 169-174)

என கண்ணகிக்கு நேரும் துன்பத்தை முன்னதாக அறிந்த வையை தன் கண்ணீரை மலர் என்ற ஆடையால் மூடி மறைத்து தன் நிலையை கண்ணகிக்கு காட்டவில்லை.

**சம்பந்தர்**

திருஞான சம்பந்தர் வையையாற்றில் இட்ட ஏடு நீரை எதிர்த்துச் சென்றுள்ளது. சமணர்களை புனல் வாதத்தில் வென்றவர். பாண்டிய நாட்டு பாடல் பெற்ற சைவத்தலங்களில் 11 ஆவது தலம். திருப்பூவனம் பதிகத்தில் வையையை

ஓடிநீரால் வைகை சூழும்

உயர்திருப் பூவணமே *(697)*

மையார் பொழிலின் வண்டுபாட

வைகை மணிகொழித்துச்

செய்யார் கமலம் தேனரும்பும்

தென்திருப் பூவணமே

வையையின் நீர் பெருக்கை

*"பாரார்வைகைப் புனல்வாய் பரப்பிப்*

*பன்மணிபொன் கொழித்துச்*

*சீரார் வாரி சேர நின்ற*

*தென்; திருப் பூவணமே"*

*"ஓட நீரால் வைகை சூழும் உயர்திருப் பூவணமே"*

எனப் பாடியுள்ளார். கருவூர்த் தேவர் திருவிசைப் பாவில்

*"மருதர சிருங்கோங் ககின்மரஞ் சாடி*

வரைவளங் கவர்ந்திழி வையைப்"

என வையைத் தென் கரையில் வீற்றிருகு;கும் பூவனநாதரை புகழ்ந்தேத்திய பொழுது வைகையின் வளத்தைப் பாடியிருக்கின்றார்.

திருப்புவனத்தில் பிறந்து வையை நீரின் வளத்தில் வாழ்ந்த கந்தசாமிப் புலவர், திருப்பூவன நாதருலாவில் வையையின் வளங்களை

வையைநதித் தீரன் வந்தான்

.........துய்யதிரை

**வையைநதியென்று மணிகர் ணிகையென்றும்** *(184)*

**வையைநதித் தீரன் மணிகர் ணிகைத் தீர்த்தன்** *(453)*

ஒரு தலத்தின் பல்வேறு பெருமைகளுள் முதன்மையானவை மூர்த்தி தலம், தீர்த்தம், விருட்சம்; என்ற நான்குமாகும். இங்கு வையை வெள்ளத்தால் தீர்த்தமாகவும், பலாமரம் விருச்சமாகம் காசியை விட வீசம் புண்ணியம் கூடப் பெற்ற தலமாகக் கொண்டு மூர்த்தியாக பூவணநாதர் என்ற புஷ்பவனேஸ்வரர் உறைகின்றார்.

திருவிளையாடற் புராணத்தில்

திருவிளையாடற் புராணம், மதுரைக் காண்டம்

**வையைக் கிழவன் றன்னருமைக் குமரன் தனக்கு** *(பா: 968)*

திருவிளையாடற் புராணம், கூடற் காண்டம்

**வையை நாடனும் வந்தது நோக்குறீஇ** *(பா:1810)*

என்கிறது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகர் போற்றித் திருவகவலில்

பொருப்பமர் பூவணத்தரனே போற்றி

எனப் பாடி பரவியுள்ளார். கி.பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கருவூர்த் தேவர் திருவிசைப்பாவில்

**"வரைவளங் கவர்ந்திழி வைகைப்**

**பொருதிரை மருங்கோங்கு"**

எனக் குறிப்பிட்டுள்ளார்.

### மணலூர்

பாண்டியர்களின் பழைய தலைநகரம் இவ்வூர் என்கின்றனர். இவ்வூருக்கு தென்மேற்கே மூன்று கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது கீழடி. இங்குக் கிடைத்துள்ள பானை ஓடுகளில் மீன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளமை இது பாண்டிய நாட்டின் தலைநகரம் என்பதற்கு மேலும் வலு சேர்க்கிறது. திமில் கொண்ட காளை உருவம் கிடைத்துள்ளது. இப்பகுதியில் உழு குடிகளான வேளாண்குடிகள் வாழ்ந்ததின் வெளிப்பாடாகும்.

### திருப்புவனம்

மதுரையைப் போலவே தொன்மையான ஊர். வையைக் கரையில் வளமான காடாக, கழனியாக பன்னெடுங்காலமாகத் திகழ்ந்து வருகின்றது. இவ்வூர் இறைவன் காசியிலிருந்து வருகை தந்த தருமஞ்சன் என்பவருக்குப் பூ வண்ணமாகக் காட்சி தந்ததால் பூவணம் என்றாகி திரு என்ற முன்னொட்டு பெற்று திருப்பூவணம் எனப் பெயர் பெற்றுள்ளது. திருப்புவனத்தின் கிழக்குப் பகுதி கோட்டை, நடுப்பகுதி நெல்முடிகரை, மேற்குப்பகுதி பழையூர் என்று இன்றும் அழைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டின் கோட்டை நகரங்கள் எல்லாமே நீர் வசதிகளைக் கொண்டதாக இருக்கும் என்கிறார் பண்பாட்டு ஆய்வாளர் பேரா. தொ. பரமசிவன்( நாள் மலர்கள் ப.50) வையையின் நீர்ச் செழிப்பால் திருப்புவனத்திலும் கோட்டை இருந்துள்ளது. பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்ட இப்பகுதி அவர்களின் பழைய தலைநகரான மணலூரின் கிழக்கு எல்லையாக அமைந்துள்ளது.

வயலும் வயல் சார்ந்த இப்பகுதியில் வையைக் கரையின் இருமரங்களிலும் வீரனேந்தல், மழவராயனேந்தல், பெத்தானேந்தல், தவத்தாரேந்தல், மெய்யானேந்தல், செல்லப்பனேந்தல், வன்னியனேந்தல்,

முத்தனேந்தல், அன்னியனேந்தல், லாடனேந்தல் என ஏந்தல் என்ற நீர்த்தேக்கத்தை பெயர்களாக உடைய ஊர்கள் உள்ளன. ஏந்தல் என்பதற்கு மலை, மேடு, தேக்கம், தாங்குதல் என பல பொருள்கள் உள்ளன. ஏந்தலைப் பின்னொட்டாக பெற்ற இவ்வூர்களில் பாண்டியர்கள், வேளாண்குடிகள். பிற தொழில்கள் செய்தோரின் தொன்மையான பொருள்கள், எச்சங்கள் பொதிந்து கிடக்கும். "காஞ்சிரங்குளம், கட்டிக்குளம், கலைகுளம், கானர்குளம், வல்லக்குளம், வேலாங்குளம், ஆலங்குளம், டி. புளியங்குளம், மேலசொரிக்குளம், கீழசொரிக்குளம், பறையங்குளம், பாப்பாங்குளம், அச்சங்குளம், இலந்தைக்குளம், நெடுங்குளம் ஆகிய ஊர்கள் குளம் என்பதை பின்னொட்டாக பெற்றுள்ள ஊர்களாகும்ஃ கல்லூரணி, அக்கவயல், மடைப்புரம், மேட்டுமடை, சமுத்திரம் போன்ற ஊர்கள் நீர் நிலைகளின் பெயர்களைத் தாங்கியுள்ளன"[4] வேளாண்மையின் சார்புத் தொழில்களான தச்சு, கொல்லு, மண்பாண்டத் தொழில், செங்கல் சூளை, கயிறு திரித்தல், தென்னையினாலான கலைப்பொருள்கள் உருவாக்கல் நடைபெற்று வருகின்றன. இத் தொழில்களால் இப்பகுதியில் சந்தை, அங்காடி, தாவணிகளில் சிறு வணிகமும் 'திருவிழாக்கடை' என்னும் சிறப்புச் சந்தையும் நடைபெறுகின்றன.

வையை நதியின் நீர் வளத்தால் வேளாண் பொருளாதார வளர்ச்சி பெற்றுள்ள இப்பகுதியில் செல்வச் செழிப்பில் கட்டப்பெற்ற கட்டடங்கள், நீர் நிலைகள், மக்கள் புழங்குபொருட்கள், தொழிற்கருவிகள், அணிகலன்கள் போன்றவை கால வெள்ளத்தில் புதைபொருட்களாக இப்பகுதியில் நிலத்திற்கடியில் புதைந்திருக்கும். இவ்வூரிலுள்ள திருக் கோயில்களில் வழிபாடுகளும், விழாக்களும், கலை நிகழ்வுகளும் சிறப்பாக நிகழ்த்தப்படுகின்றன. திருப்புவனம் புஷ்பவனேஸ்வரர் - சௌந்தரநாயகி அம்மன் திருக்கோயில் தேவாரப் பாடல் பெற்ற பாண்டியம்மதி பதினான்கில் ஒரு தலமாகும். இங்குப் பங்குனி மாதத்தில் பெருந்திருவிழா பத்து நாட்கள் நடைபெறும். ஆறு, எட்டாம் திருவிழாக்கள், தீர்த்தவாரி

வையை ஆற்றினுள் நிகழ்வது குறிப்பிடத்தகுந்தது. இங்குள்ள பெருமாள் கோயிலிலும் பல திருவிழாக்கள் நிகழ்த்தப்படுகின்றன.

இடைக்கால இலக்கியங்களில் திருப்பூவணம் என்று சுட்டப்பெற்றுள்ள இவ்வூர் சிவகங்கை மாவட்டத்திலுள்ள ஒரு வட்டமாகும். திருப்பூவணக்காசி, புட்பவனம், இலக்குமிபுரம், பிரம்மபுரம், பாஸ்கரபுரம், ஆனந்தவனம், முத்தியாச்சிரமம், இரகசிய சிதம்பரம், தட்சிணகாசி, சதுர்வேதபுரம், பிதிர்முக்திபுரம், திருப்புவனம் என பல சிறப்புப் பெயர்களால் சுட்டப் பெறும் புன்னியத்தலமாகும். திருஞான சம்பந்தரும,; அப்பரும், சுந்தரரும் ,மாணிக்க வாசகரும் இங்குள்ள புஷ்பவனேஸ்வரர் சௌந்தரநாயகியை வழிபட வந்து வடகரையில் இருந்து பார்த்த வேளை வையையாற்று மணல் முழுதும் சிவலிங்கங்களாகத் தெரிய: அங்கிருந்தபடியே இவ்விறைவனைப் பாடிப் பரவி வழிபட்டுத் திரும்பியுள்ளனர். பொன்னனையாள் என்ற சிவனடியார் இங்குள்ள இறைவனிடம் பொன்பெற்று சிவனடியார்களுக்குத் திருஅமுது படைத்தார் என்ற குறிப்பும் உள்ளது.

புஷ்பவனேஸ்வரர் சந்நிதிக்கு எதிரே வட கரையோரத்தில் ஆற்றில் ஆழமாக மணல் அள்ளிய பொழுது செங்கல்லாலான வீடுகள், கிணறுகள், சுவர்கள் இருந்தன. 1978இல் வையையில் பெருவெள்ளம் வந்தது. திருப்புவனம் ஆற்றுப்பாலம் இடிந்தது. ஏற்பட்ட பெருவெள்ளத்தில் இப்பள்ளம் மூடப்பட்டுள்ளது

மாறைநாடு

தொல்லியல் துறையினர் தமிழகத்தின் தொன்மையைப் பதினேழு ஆறுகளின் ஓரங்களில் ஆய்வு செய்யும் நோக்கில் வையை ஆற்றங்கரைகளில்; ஆய்வு செய்யத் தீர்மானித்து, முதலி;ல் தேர்வு செய்யப்பெற்ற ஊர் மறைநாடு என்கிறார் தொல்லியலாளர் அமர்நாத்

இராமகி;ருஷ்ணன். ; கீழடிக்குக் கிழக்கும், மேற்கும், தெற்கும், வடக்கும் ஆய்வுகள் தொடர வேண்டும் என்றும் *(Keezhadi an unsolved mystry)* கீழடி தீர்வில்லா பெரும் ரகசியம் என்கிறார் ஆரா. அருணா. இவ்வூரின் பெருமைகளைப் பொய்கையார் இப்பகுதியைக் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஆட்சிசெய்த 'சந்திரவாணன்' என்பவர் மீது பாடிய தஞ்சைவாணன் கோவையில் 'தென்மறைநாடு' என்று சுட்டியுள்ளார்.

திருப்பரங்குன்றத்திலிருந்த கொந்தகை, கீழடி, மணலூர், திருப்பூவணம், மறைநாடு வழியாக மானாமதுரை வழியாக ராசசிங்க மங்கலம் கண்மாயில் வையை கலக்கின்றது. 'தென் மறைநாட்டு வையைத் துறைவன (பா.106), 'தத்துங் கரைவையை சூழ் தஞ்சை வாணன் தமிழ் வெற்பரே' (பா:26)

**"மதியேய் சுதைமதில் சூழ்தஞ்சை வாணன்**

**நதியேய் சுழிநிக ரும்பழி தீருந்தி நல்லவரே"** (பா:70)

" ................ **செங்கைவாணன் வையை**

**தருநீர் மலிவயல் தஞ்சையின் னாளன்று தஞ்சமிலேன்"** (பா: 91)

போன்ற பாடலடிகள் வையையால் மாறைநாடு செழிப்புற்றுத் திகழ்ந்ததைச் சுட்டுகின்றன. தற்பொழுதும் இம் மாறைநாட்டுக் கண்மாய் வையை நீரின் வளத்தால் பெருகி மருதநிலச் சிறப்புகளுடன் திகழ்கின்றது. இம் மன்னன் 'தென்மாறைநாட்டு வையத் துறைவன்' என்று சிறப்பிக்கப்பட்டுள்ளான்.

### மானாமதுரை

சிவகங்கை மாவட்டத்தில் வையையின் வளத்தால் பயன்பெற்று வரும் வளமான பகுதி. வானவீரன் மதுரை என்ற சிறப்புப் பெற்ற மானாமதுரை. இம்மானாமதுரை வட்டத்திலிருந்து திருப்புவனம் வட்டம்

*2018 இல் பிரிக்கப்பெற்றது. வெள்ளிக்குறிச்சி, கட்டிக்குளம், வாகுடி, பெரும்பச்சேரி, பசலை, மிளகனூர் போன்ற ஊர்க்கண்மாய்களின் நீராதாரம் வைகை. மானாமதுரையின் மண் வளத்தின் தனித் தன்மையால் இங்கு மண்ணில் செய்யப்பெறும் தாழிப் பானைகள், அடுக்குப்பானைகள், குதிர், கடம், ஓடு, செங்கல், விளக்குகள், மண் குளிர்சாதனம், பானை ஓடுகள், அக்கினிச் சட்டிகள், மண் குதிரைகள். (Terakotta) போன்றவை உலகப் புகழ் பெற்றவை. வெளிநாடுகளிலிருந்தும் இங்கு வந்து வாங்கிச் செல்கின்றனர். இவற்றிற்குப் புவிசார் குறியீடு வழங்கியிருக்க வேண்டும். சுற்றுச் சூழல் பாதுகாப்புடன் தமிழரின் நாகரிகத்தின் புழங்கு பொருட்களாக விளங்குவதோடு ஐந்து நட்சத்திர விடுதிகளிலும் சுவையான மண்பாண்டச் சமையலுக்கு அதிகம் பயன்படுபவை இவ்வூர் மண்பாண்டங்கள்.*

*கீழடியில் கிடைத்திருக்கும் மண் ஓடுகள் தூம்பு, உறை கிணறுகளை இப்பகுதி மண்பாண்டங்களுடன் அறிவியலடிப்படையில் ஒப்பாய்வு செய்தால் காலப்பழமை, மானாமதுரை மண்ணின் மகத்துவத்தை அறிய முடியும். இவ்வூரிலுள்ள ஆனந்த வள்ளியம்மன், வீரழகர், திருக்கோயில்கள் வைகை யாற்றங்கரைகளால் கி.பி. எட்டாம் நூற்றாண்டுகளால் கட்டப்பட்டவை. இக்கோயில்களில் அன்னிய படையெடுப்புகளின் போது அணிகலன்கள், தெய்வத்திருமேனிகள் மற்றும் கலைப்பொருட்களைப் பாதுகாக்கும் நோக்கில் பூமிக்கடியில் புதைத்து வைத்திருப்பதாகவும் கூறுகின்றனர்.*

## தொகுப்புரை

*தேனி மாவட்டம் கடமலைக்குண்டு, மேகமலைப் பகுதியில் வைகை உருவாகி அது சென்றடையும் இடம் இராசசிம்ம மங்கலம். வைகை சிவகங்கை மாவட்டத்தில் மணலூரிலிருந்து திருப்புவனம் வழியாகச் சென்று வேதியரேந்தல் மதகு அணையில் தடுக்கப்படுகிறது.வைகையின் மொத்த நீளம் 258 கிலோமீட்டர். திருப்புவனத்திற்கு மேற்கே 10*

கிலோமீட்டரும், கிழக்கே சுமார் 40 கிலோ மீட்டருமாக 50 கிலோமீட்டர் ஓடுகின்றது.பாண்டிய நாட்டு பாடல்பெற்ற சைவத்தலங்களில் வைகை ஆற்றின் தென்கரையில் அமைந்திருக்கும் திருப்புவனத்தில் உறைபவர் புஷ்பவனேஸ்வரர் சமேத சௌந்தரநாயகி.இத்திருப்புவனத்திற்கு மேற்கிலும், கிழக்கிலும் வையையின் வட, தென் கரைகளிலுள்ள ஊர்களில் தொன்மையான கீழடி நாகரிகத்தின் சின்னங்கள், அடையாளங்கள் மிகுதியாகக் கிடைக்கும்.புஷ்பவனேஸ்வரர் சந்நிதி முன்பு, கலியளந்தூர், மாறைநாடு, வெள்ளிக்குறிச்சி, மானாமதுரை, அரியாலூர் போன்ற வையையாற்றுப் படுகைகளிலுள்ள ஊர்களில் அகழாய்வு மேற்கொள்ள வேண்டும்.

நாகரிகங்கள் ஆற்றங்கரைகளில் தோன்றியவை. கீழடி நாகரிகம் தமிழகத்திலுள்ள பதினேழு ஆற்றங்கரை நாகரிகங்களில் ஒன்று.வையை ஆற்றங்கரைகளில் முதலில் ஆய்வு செய்யத் திட்டமிட்ட ஊர் மாறைநாடு என்கிறார் இங்கு ஆய்வு செய்த திரு. அமர்நாத் இராமகிருஷ்ணன்.திருப்புவனம் அப்பர், சம்பந்தர், சுந்தரர். மாணிக்கவாசகர், கருவூர்த் தேவர், கந்தசாமிப் புலவர் போன்றோரால் பாடல்பெற்ற தலம்.திருமுருகாற்றுப்படை, பரிபாடல், மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம். திருவிளையாடற்புராணத்தில் சிறப்பிக்கப் பெற்றுள்ள வையை இவ்வூரின் மையமாக பன்னெடுங்காலமாக ஓடிக் கொண்டிருக்கிறது.இப்பகுதியில் எந்தல், குளம், ஏரி, மடை போன்ற பெயர்பெற்ற நீர்நிலைகள் உள்ள ஊர்களில் அகழாய்வு செய்தால் ஏராளமான சான்றுகள் கிடைக்கும். கீழடியில் கிடைத்துள்ள மண் ஓடுகளைத் தற்கால மானாமதுரை மண்பாண்டங்கள் செய்யப்பயன்படும் மண்ணுடன் ஒப்பாய்வு செய்தலும் வேண்டும்.

*References*


1. *Muthu, M.Pandi. (2019).* ஊரகத் தெய்வ வழிபாட்டுத் தலங்கள் ஆவணப்படுத்துதல் *(*சிவகங்கை மாவட்டம்*). 10.13140/RG.2.2.23933.31200.*
2. *Manikandan, M. (2019). Evaluation of the causes of Tamil Music Decline. Journal of the Gujarat Research Society, 21(16), 385-390.*
3. *Manikandan, M. (2019). Evaluation of the causes of Tamil Music Decline. Journal of the Gujarat Research Society, 21(16), 385-390.*